**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 40 /2024 பி.வா.சா.2**

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ம் நாள் திங்கள்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: பொன்னழகன் | தந்தை பெயர்: பழனி |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**<u>23.02.2026:</u>**

**<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை:</u>**

1. தாவாச் சொத்து உலகம்பட்டி கிராமத்தில் உள்ளது . எனது ஊர் திண்டுக்கல் மாவட்டம் க. புதுார் ஆகும். நான் வாதியின் முகவர் சத்தியாவின் கணவர் ஆவேன். நான் 2007 ம் வருடம் சத்தியாவை திருமணம் செய்தேன் . அதற்கு பின்பு தாவாச் சொத்தின் விவரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

2. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு எனது மனைவி, சத்தியா மற்றும் எனது மாமியார் சொல்லி தெரியும் . வழக்கு நிலுவையின் போது சத்தியாவிற்கு அவரது தாயார் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும் போது பட்டா சத்தியா தாயார் விஜயா பெயரில் இல்லை என்றால் சரியல்ல . தாவாச் சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியம் என்றாலும் எனது மனைவியும் , அவரது தாயாரும் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக வழக்கு நடத்தி வருகிறார்கள் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.